பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி சென்னை – 4

24 07 2025 THURSDAY 7.15 PM

## தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்திய விவசாயிகளுக்கு 37 புள்ளி ஐந்து பில்லியன் டாலர் சந்தையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

2. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக இரு அவைகளின் நடவடிக்கைகள் நான்காவது நாளாக இன்றும் பாதிக்கப்பட்டன.

3. சட்டிஷ்கட்-ல் 15 நக்சலைட்டுகள் இன்று ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்தனர்.

4. ரஷ்யாவின் Angara விமானம் இன்று விபத்துக்குள்ளானதில், 49 பேர் உயிரிழந்தனர்.

5. சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Unnati Hooda காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்

- இனி விரிவான செய்திகள் –

<<<<<<<>>>>>>

இந்தியா – இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்திய விவசாயிகளுக்கு 37 புள்ளி ஐந்து பில்லியன் டாலர் சந்தையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்தியாவில் உள்ள விவசாயிகள் விருப்ப அடிப்படையில் பால் மற்றும் பால் பொருட்கள், காய்கறிகள், ஆப்பிள், சமையல் எண்ணெய், உள்ளிட்டவற்றின் வர்த்தகத்தை பாதுகாப்பான முறையில் மேற்கொள்வதற்கு இந்த வர்த்தக ஒப்பந்தம் வகை செய்துள்ளது.

இதனால் இந்தியாவில் உள்ள கிராமப்புற விவசாயிகள்மிகுந்த பயன்பெறுவர்.

இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பதப்படுத்தப்பட்ட உணவுகளுக்கான ஏற்றுமதி வரி முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று இந்திய மீனவர்கள் ஐந்து புள்ளி நான்கு பில்லியன் டாலர் மீன்களை இங்கிலாந்து நாட்டு சந்தைகளுக்கு அனுப்பவும் வகை செய்யப்பட்டுள்ளது.

அந்நாட்டிற்கு 20 சதவீத இறக்குமதிவரியுடன் மேற்டிகாள்ளப்பட்டிருந்த மீன் வர்த்தகத்திற்கான வரி தற்போது முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது.

இதனால், இந்திய விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படுவதுடன் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளும் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<<>>>>>>

நாட்டில் உள்ள துறைமுகங்கள் உலக வர்த்தக மையங்களாக உருவாகி வருகின்றன என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் எழுதிய கட்டுரையை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், உலக வர்த்தகத்தை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் மின்னணு கட்டமைப்புகள் நவீன மயமாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

உலகின் முக்கிய கப்பல் கட்டுமான நிறுவனங்கள் இந்திய நிறுவனங்களுடன் இணைந்து, முதலீடுகளை செய்து வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக இரு அவைகளின் நடவடிக்கைகள் நான்காவது நாளாக இன்றும் பாதிக்கப்பட்டன.

பீகாரில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் குறித்த பிரச்சினையை எழுப்பி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக இரு அவைகளின் நடவடிக்கைகள் முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும், இதனைத் தொடர்ந்து நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

முன்னதாக, மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டபோது பேசிய மக்களவைத் தலைவர், அவையின் மாண்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் உறுப்பினர்கள் செயல்படக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>

கீழடி அகழாய்வு அறிக்கையை சட்டப்பூர்வமாகவும், அறிவியல்பூர்வ அங்கீகாரத்துடனும் வெளியிடுவதற்கான முயற்சியை இந்திய தொல்லியல் ஆய்வுத்துறை மேற்கொண்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் இதனை கூறியுள்ளார்.

கடந்த 2014-ஆம் ஆண்டு முதல், 2017-ஆம் ஆண்டு வரை மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறித்த தகவல்கள் தொல்லியல் ஆய்வுத்துறையின் பரிசீலனையில் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாநில அகழாய்வுத்துறை மற்றும் கல்வி நிறுவனங்கள் மேற்கொண்ட முக்கிய ஆய்வுகளின் முடிவுகள் குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

கீழடி அகழாய்வில் கிடைத்த தொல்லியல் பொருட்களுக்கு அறிவியல் பூர்வமாக உலக அளவில் அங்கீகாரம் பெறுவதற்கும், சட்ட ரீதியாக இதனை உறுதி செய்வதற்குமான பணிகளை இந்திய தொல்லியல் துறை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

மக்களுக்கு குறைந்த விலையில் தரமான மருத்துவ சேவை கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு அயராது மேற்கொண்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் Lady Harding மருத்துவக்கல்லூரி பட்டமளிப்பு விழாவில், மருத்துவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசிய அவர், மருத்துவத்துறையில் சரியான கொள்கைகளை பின்பற்றி தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதில் அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் கூறினார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவீதத்தை மருத்துவ செலவினங்களுக்காக அரசு ஒதுக்கியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய சுகாதாரத் கொள்கையில் குறிப்பிட்டுள்ளப்படி, இதனை இரண்டு புள்ளி ஐந்து சதவீதமாக உயர்த்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மகளிருக்கான அதிகாரத்தை உறுதி செய்ய வேண்டும் என்ற அரசின் தொலைநோக்கு பார்வையை பூர்த்தி செய்வதில் Lady Harding மருத்துவக்கல்லூரி முக்கிய பங்கு வகிப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>

சட்டிஷ்கட் மாநிலம் தண்தேவாடா மாவட்டத்தில் 15 நக்சலைட்டுகள் மத்திய ரிசர்வ் காவல்படை அதிகாரிகள் முன் ஆயுதங்களை ஒப்படைத்து இன்று சரணடைந்தனர்.

இதில், ஐந்து பேரை அடையாளம் காட்டுபவர்களுக்கு மொத்தம் 15 லட்சம் ரூபாய் ரொக்கம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

பஸ்தர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட "வீட்டுக்கு திரும்புவோம்" என்ற விழிப்புணர்வு இயக்கத்தின் பயனாக இவர்கள் சரணடைந்துள்ளனர்.

இந்த 15 நக்சலைட்டுகளும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு கௌரவ் ராய் மற்றும் மத்திய ரிசர்வ் காவல்படை அதிகாரி திரு ராகேஷ் சௌத்ரி முன்னிலையில் சரணடைந்தனர்.

சட்டிஷ்கட் மாநிலத்தில் புதிய திட்டத்தின்படி சரணடையும் நக்சலைட்டுகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு சுய வேலைவாய்ப்புக்கான உதவிகளும் செய்து தரப்படுகிறது.

பொது வாழ்க்கையில் அவர்கள் திரும்புவதற்கு ஏதுவாக மனநல ஆலோசனைகளும், பாதுகாப்பு உத்தரவாதமும் அளிக்கப்படுகிறது.

<<<<<<<>>>>>>

ரஷ்யாவின் Angara விமானம் இன்று விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 49 பேரும் உயிரிழந்தனர்.

Blagoveshchensk என்ற இடத்தில் இருந்து ரஷ்ய - சீன எல்லைப்பகுதியில் அமைந்துள்ள Tynda என்ற இடத்திற்கு இந்த விமானம் சென்று கொண்டிருந்தபோது Amur மலைப்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

விமானம் தரையிறங்குவதற்கு சில நிமிடங்கள் முன்பு இந்த விபத்து நேரிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**Tynda –விருந்து 10 மைல் தூரத்தில் வந்துகொண்டிருந்தபோது விமானம் மலைப்பகுதியில் மோதியது.**

**அடர்ந்த வனப்பகுதியில் இந்த விமானம் விழுந்திருப்பதால் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கும் பணியிலும் தொய்வு ஏற்பட்டுள்ளது.**

**<<<<<<<>>>>>>**

**தென்கிழக்கு ஆசிய நாடுகளான தாய்லாந்து – கம்போடியா இடையே நடைபெற்ற ராணுவ தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர்.**

**எல்லைப்பிரச்சினை காரணமாக இந்த தாக்குதல் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.**

**தாய்லாந்தின் Sisaket மாகாணத்தில் கம்போடிய ராணுவத்தினர் பீரங்கி மற்றும் ஏவுகணைகளை கொண்டுநடத்திய தாக்குதலில் சிறுவன் உட்பட 11 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தாய்லாந்து மருத்துவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

**இதனைத்தொடர்ந்து, கம்போடியாவின் எல்லைப்பகுதியில் உள்ள ராணுவ நிலைகளை குறிவைத்து தாய்லாந்து ராணுவம் வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.**

**இதற்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று கம்போடியா தெரிவித்துள்ளது.**

**<<<<<<<>>>>>>**

**பிலிப்பைன்ஸில் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக 12 பேர் உயிரிழந்தனர்.**

**அந்நாட்டில் Wipha புயல் காரணமாக பெய்த கனமழையினால் 20 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**தலைநகர் மணிலா மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்ந்து நீடிப்பதாக ஏஜென்சி செய்திகள் கூறுகின்றன.**

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Unnati Hooda** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 19-21, 21-13 என்ற செட் கணக்கில இந்தியாவின் பி வி சிந்துவை வென்றார்.

--------------

ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

தென்கொரியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 500 மீட்டர் பிரிவில் **Anand Vel Kumar** தங்கப்பதக்கத்தையும், **Aryan Pal Ghuman** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியின் ஆடவர் ஜூனியர் பிரிவில் **Anirudhan** -ம், மகளிர் பிரிவில் **Rutva Prakash**-ம் வெண்கலப்பதக்கத்தை வென்றனர்.

-----------

பக்ரைனில் நடைபெற்றுவரும் உலக ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி மற்றும் **Aditya Mehta** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

----------------

சுவிட்சர்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் 27 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

------------------

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இந்தோனேஷியாவின் **Solo**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் 21-19, 21-14 என்ற செட் கணக்கில் சீனாவின் **Si Chen Shi**-ஐ வென்றார்.

இப்போட்டியில், **Vennala Kalagotla, Rounak Chouhan, Ansh Negi** மற்றும் **Pranauv Ram Nagalingam** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

-------------

லாகோஸில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் - ஸ்ரீஜா அகுலா இணையும், **Anirban Ghosh – Krittwika Rai** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

----------------

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப்போட்டிகளின் வில்வித்தை பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் குழு பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா – சீன தைபே-யை வென்றது.

மகளிர் ஐந்தாயிரம் மீட்டர் ஓட்டப்பிரிவில் சீமா இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<<>>>>>>**